# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




“தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே.” (பிர. 12:13)

**மன்னா – 10** மே 2020 **பிரதி – 2**



# ஆயர் மடல்



கடமையை கருத்தாய் செய்யத்தூண்டும் இறை இயேசுவின் நாமத்தில் மே மாத வாழ்த்துக்கள்.

கொள்ளைநோயின் தாக்கம் அனைத்து நாடுகளையும் திணறடித்துக் கொண்டிருக்க நாம் செய்யவேண்டிய முக்கிய கடமை என்ன என்பதை உணர்ந்து செயல்பட அன்போடு அழைக்கிறேன்.

**பகிர்வோம்:-** நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்த அருள்நாதர் இயேசு கிறிஸ்து நமக்கு கற்றுத்தந்த பிரதான கட்டளை “உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல உன் அயலாரிடத்தும் அன்புகூருவாயாக”. நமக்கு ஆண்டவர் நன்மையைத் தந்திருப்பாரே என்றால் நம்மில் உணவு இன்றி இருப்போருக்கும், நம்மால் வாழ்வு பெறவேண்டிய மக்களுக்கும் நமது கைகள் நீட்டப்படவேண்டும் என்பதை உணர்வோம்.

**பரமன் பாதம் அமர்வோம்:-** “உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்” (பிலிப்பியர் 4:6).

இரண்டாவது நமது கடமை ஜெபம். ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து இந்திய தேசம், நாம் பணிசெய்யும் ஓமான் தேசம், நமது திருச்சபை குடும்பங்கள், நண்பர்கள், உறவினர்கள், நமது குடும்பம், பிள்ளைகள், வாழ்வுகள், தேவைகள், பாதுகாப்பு மற்றும் நன்மைகளுக்காக ஒருநாள் ஒரு மணி நேரமாவது ஜெபிக்க அன்போடு கேட்கிறேன். தினமும் காலை 9 மணி முதல் 10 மணிவரை நமது திருச்சபை ஜெபவீரர்களோடு நீங்களும் ஜெபத்தில் இணைந்து ஜெபிக்க அன்போடு அழைக்கிறோம்.

சபைகூடி வருதலுக்காக பாரத்தோடும், எதிர்பார்ப்போடும் இருந்து திருச்சபைக்கான கடமைகளை நிறைவேற்றி ஜெபிக்கும் உங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கிறேன். உங்கள் தனிப்பட்ட ஜெபக்குறிப்புகளை அலைபேசி வழி தெரிவித்து ஜெபிக்க அன்போடு வேண்டுகிறேன்.

தொடர்ந்து விடுதலையோடு ஆராதிக்க கர்த்தர்தாமே உதவி செய்வாராக. இறை பாதுகாப்பு உங்களை ஆட்கொள்வதாக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## ஆயர் அருளுரை

## கடமையைச் செய்வோம்

**“மனுஷனே நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயம் செய்து இரக்கத்தை சிநேகித்து உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடம் கேட்கிறார்” (மீகா 6:8).**

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே! இறைவன் விரும்பும் வாழ்வு என்பது நமது கடமையைச் செய்வதுதான். நமது கடமை நீதி நியாயம் செய்வதும் மனத்தாழ்மையாய் நடந்துக்கொள்வதும் எனத் திருமறை நமக்குக் கற்றுத்தருகிறது.

### 1. மக்களுக்கு நாம் செய்வது:-

முதலாவது கடமை நம்மைப்போல் பிறரையும் நேசிக்கும் தன்மை. நீதி நியாயம் செய்யப்படவேண்டும் என்பது இறைவன் விரும்பும் ஒன்று. நீதி என்று குறிப்பிடும்போது பிலிப்பியர் 3:9-ல் கூறும் “சுயநீதியை உடையவனாயிராமல் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாசம் மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து” என நம் நீதி அல்ல, இறைவன் விரும்பும் நீதி என்பதை நினைவிற்கொள்ளவேண்டும். தேவ நீதியை நடப்பிக்காதவன் கீழ்ப்படியாமை உடையவன் என திருமறை சுட்டிக்காட்டுகிறது.

### 2. கர்த்தருக்கு நாம் செய்வது:-

கர்த்தருக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடக்கவேண்டும். நற்செய்தி கூறுவதிலும், ஜெபத்திலும் தரித்திருந்து மனத்தாழ்மையாய் நடக்கவேண்டும் எனத் திருமறை நம்மை அழைக்கிறது. “தேசத்திலுள்ள எல்லா சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்” (செப்பனியா 2:3).

நமது இக்கட்டு நாளிலே நமது கடமை கர்த்தரைத் தேடுவதும், கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திருப்பதுமே. நம்மில் ஒன்றுமில்லை, நம்மாலும் ஒன்றுமில்லை என்ற மனத்தாழ்மையின் உணர்வோடு இறைபாதம் நம்மை ஒப்புக்கொடுப்போமாயின் கர்த்தர்தாமே நமக்கு அக்கினி மதிலாய் இருப்பார். தம்முடைய பிள்ளைகளைக் காக்கும் தேவ அக்கினியாய் செயல்படுவார்.

“நான் அதற்குச் சுற்றிலும் அக்கினிமதிலாயிருந்து, அதின் நடுவில் மகிமையாக இருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்” (சகரியா 2:5).



மத்திய ஆப்பிரிக்காவில் எட்டு நாடுகளுக்குள் போர் நடந்து கொண்டுதான் இருந்தது. ஒரு நாள் ஹிட்டு (Hutu) என்னும் கிராமத்தில் டுட்சி (Tutsi) என்னும் இடத்தின் போர் வீரர்கள் அந்த கிராமத்தை அழித்துவிடவேண்டும் என்ற எண்ணத்தோடு வந்தனர். அந்த இரவு நேரத்தில் ஒரு இளம் போதகரின் வீட்டிற்கு கைகளில் இயந்திர துப்பாக்கிகளுடன் உள்ளே நுழைந்து, போதகரும் அவருடைய குடும்பமும் அமர்ந்திருந்த இடத்தில் தங்கள் துப்பாக்கியைக் காட்டி, கொல்லப்போவதாக மிரட்டினார்கள். அப்போது அந்த போதகர், “எங்களைக் கொல்லுங்கள், ஆனால் அதற்கு முன் நாங்கள் குடும்பமாக ஜெபிக்க எங்களை அனுமதியுங்கள்” என்று கேட்டு கொண்டார். சரி எப்படியும் இவர்கள் மரிக்கத்தானே போகிறார்கள் என்று அந்த வீரர்களும் அனுமதித்தனர்.

அதன்படி அந்தப் போதகரின் குடும்பத்தினர் ஒருவரோடொருவர் கைகளைக் கோர்த்துகொண்டு முழங்கால்படியிட்டு, தேவனிடம் இவர்களிடமிருந்து எங்களைக் காப்பாற்றும் என்று ஜெபிக்க ஆரம்பித்தனர். அவர்கள் அப்படி ஊக்கத்தோடு ஜெபித்து எழுந்தபோது அந்தக் கொடியவர்கள் யாரையும் காணவில்லை. அவர்கள் வீட்டிலிருந்து மட்டுமல்ல அந்த கிராமம் முழுவதிலுமிருந்து அவர்கள் ஓடியிருந்தனர். போதகரின் குடும்பத்திற்கும், மற்றவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை ஏதோ நடந்திருக்கிறது என்று மட்டும் அறிந்திருந்தார்கள்.

சில மாதங்கள் கழித்து, ஒரு பொதுவான இடத்தில் ஒரு கூட்டம் நடந்தது. அதில் அந்த இளம் போதகர், சில மாதங்களுக்கு முன் நடந்த சம்பவத்தை விவரித்து அதிசயமாக தன் குடும்பமும், தன் கிராமத்திலிருந்தவர்களும் காப்பாற்றப்பட்டார்கள் இதுவரை என்ன நடந்தது என்று புரியவில்லை என்றும் கர்த்தர் ஏதோ பெரிய காரியத்தை செய்தார் என்று மாத்திரம் அறிந்திருக்கிறோம் என்றும் கூறினார்.

அப்போது கூட்டத்தின் நடுவிலிருந்து ஒரு மனிதன் எழுந்துநின்று, உமக்குத் தெரியுமா? அந்த இரவில் உம்மையும், உம்முடைய கிராமத்தில் உள்ளவர்களையும் கொல்வதற்காக வந்தவர்களில் நானும் ஒருவன். உங்கள் வீட்டில் நுழைந்து உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் சுடுவதற்காக இயந்திர துப்பாக்கியை குறிவைத்தேன். அப்போது நீங்கள் ஜெபிக்க அனுமதி கேட்டீர்கள். நாங்களும் அனுமதித்தோம். நீங்கள் ஜெபித்துக்கொண்டிருந்தபோது, திடீரென்று உங்கள் அனைவரையும் சுற்றி ஒரு அக்கினி சுவர் எழும்பியது. அதிலிருந்து எழும்பிய ஜுவாலைகளினால் உங்களுக்கு என்ன நடக்கிறது என்பதை எங்களால் காணமுடியவில்லை. அந்த அக்கினியின் வெப்பத்தினால், நீங்கள் உங்கள் வீடும் எரிந்து சாம்பலாக போகிறீர்கள் என்று நாங்கள் தீர்மானித்து, உங்கள் வீட்டை விட்டு வெளியே ஓடினோம். வெளியே ஓடி வந்து பார்த்தபோது, உங்கள் வீடு முழுவதும் அக்கினியால் சூழ்ந்திருந்ததே ஒழிய எரிந்துபோகவில்லை. அந்த அதிசயத்தை பார்த்த நாங்கள் பயந்து, உங்கள் கிராமத்தை விட்டே வெளியே ஓடிவந்துவிட்டோம். பின் நான் அதைக் குறித்து சிந்தித்தபோது அந்த அக்கினி சாதாரண அக்கினி அல்ல, அது உங்கள் தேவனிடமிருந்து உங்களை காப்பதற்காக அனுப்பப்பட்ட அக்கினி! அன்றையத்தினம் உங்களை காப்பாற்றின உங்கள் தேவனை பற்றி அறிந்துகொள்ள நான் வந்திருக்கிறேன் என்று கூறினான்.

இறை இயேசுவில் அன்பிற்குரியவர்களே! கொடிய வைரஸ் தாக்கம் 210 நாடுகளை பாதித்துக்கொண்டுள்ள நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாளையத்தினம் குறித்த நிச்சயமில்லாத வாழ்வு நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். துப்பாக்கி முனை மிரட்டலைப்போல தீமைகளும், வியாதிகளும் நம்மை பயமுறுத்திக்கொண்டிருக்க நாம் செய்யவேண்டியது யாருக்கும் தீங்கு இழைக்க நாம் துணியாதபடிக்கு நம்மை ஆண்டவருக்கு முன்பாக தாழ்த்தி, ஜெபித்து இறை நற்செய்தியை மக்களுக்கு பகிர்ந்து உண்மையாய் வாழும்போது தேவ அக்கினி நம்மை சூழ்ந்துகொள்ளும். எந்த தீமையும், தீங்கும் நமக்கு நேரிடாவண்ணம் நம்மை காக்கும் என்பதை விசுவாசத்தோடு பற்றிக்கொள்வோம்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி



ஒருநாள் வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது மாணவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டார். ''மன்னிக்க முடியாத கோபம் யார் மீதேனும் உங்களுக்கு இருக்கிறதா? சந்தர்ப்பம் கிடைத்தால் யாரையேனும் பழிவாங்கத் துடிக்கிறீர்களா நீங்கள்?'' என மாணவர்களிடம் கேட்டார் ஆசிரியர்.

வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஒருமித்தக் குரலில் ஆமாம் அய்யா என்றார்கள். ஆசிரியருக்கு மிகுந்த வியப்பு! ஒவ்வொருவராக அழைத்து, ''மன்னிக்கவும், மறக்கவும் முடியாத அளவுக்கு எத்தனை கோபங்கள் உள்ளன? என்று கேட்டார். ஒவ்வொருவரும் 5, 10 என்று அடுக்கிக் கொண்டே சென்றார்கள்.

மாணவர்களுக்கு பழிவாங்கும் எண்ணம் தவறு என்பதனை புரிய வைக்க ஒரு யோசனையை கையாண்டார் ஆசிரியர். ஒவ்வொருவரிடம் ஒரு பையைக் கொடுத்தார். வகுப்பறைக்கு ஒரு கூடையில் தக்காளி கொண்டுவரப்பட்டது. யார் மீது எத்தனை பழிவாங்கும் எண்ணம் உள்ளதோ, அத்தனை தக்காளிகளை தங்கள் பையில் எடுத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. இந்த தக்காளி பையை எப்போதும் உங்களுடனே இருக்கவேண்டும் எனவும், தூங்கும்போதும் அருகிலேயே வைத்திருக்கவேண்டும் என கட்டளையிட்டார். ஒன்றும் அறியாமல் தலையை ஆட்டினார்கள் மாணவர்கள்.

ஓரிரு நாட்கள் ஒரு குறையும் இல்லை. ஆனால் அடுத்தடுத்த நாட்களில் தக்காளிகள் அழுகி நாறத் தொடங்கின. நாற்றம் அடிக்கும் பையுடன் வெளியே செல்ல மாணவர்கள் கூச்சப்பட்டனர். ஒரு கட்டத்தில் ஆசிரியரிடம் சென்று, பைகளைத் தூக்கி எறிய அனுமதி கேட்டனர்.

மெல்லப் புன்னகைத்த ஆசிரியர், நாற்றம் வீசுபவை தக்காளி மட்டுமல்ல, அந்த நாற்றத்தைப் போலவே உங்கள் பகைமை உணர்வும், பழிவாங்கும் குணமும் மனதுக்குள் அழுகி நாறிக்கொண்டிருக்கின்றன. ஆகவே பகை, பழியை மறந்து மன்னித்து விடுவதாக இருந்தால் தக்காளி பையைத் தூக்கி எறியுங்கள் என்றார். அப்போதுதான் மாணவர்களுக்கு மனத்தெளிவு பிறந்தது.

அப்போதே தக்காளி பைகளை குப்பைத் தொட்டியில் வீசிய மாணவர்கள் பகையை மறந்து ஒருவரையொருவர் ஆரத் தழுவிகொண்டு வகுப்பறைக்குத் திரும்பினர்.

தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான். மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்.

தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?

**அன்புடன் போதகர்**

## மகளிர் பகுதி

### என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்

**"என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது" (சங்கீதம் 56:8).**




இந்த வசனம் தாவீதினால், கிறிஸ்து பிறப்பதற்கு முன் 1020 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டதாகும். அந்நாட்களில் மத்திய கிழக்கு பகுதிகளில், ஒரு போர்வீரன் போருக்கு போவதற்கு முன், தன் மனைவி அல்லது தாயிடம் ஒரு கண்ணீர் பாட்டிலை வாங்கி கொடுப்பான். அந்த கண்ணீர் பாட்டில் கண்ணீரின் வடிவிலே இருக்கும். அதன் மூடி ஒரு விசேஷித்த கார்க்கினால் மூடப்பட்டிருக்கும். அதனால் அதனுள் உள்ள கண்ணீர் ஆவியாக போகாது. அதனை வாங்கும் தாயோ, மனைவியோ அந்த போர் வீரனிடம், கண்ணீர் பாட்டில் நிரம்புமுன் வந்துவிடவேண்டும் என்று கூறி அனுப்புவார்களாம். அவர்கள் நம்பிக்கை கண்ணீரை கடவுள் காண்கிறார் என்பதாகும்.

நம் தேவன் நம் கண்ணீரை கண்டு சும்மா போய்விடுகிறவரல்ல. நம்முடைய கண்ணீர்கள் ஒரு துருத்தியில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய வேதனைகள், பாடுகள், துக்கங்கள், வியாதிகள், வைரஸ் தொற்றுகள் எல்லாவற்றையும் அறிந்த தேவன் ஒருவர் உண்டு. அவருடைய துருத்தியில் நம் ஜெபம் நிறைந்த கண்ணீர் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. என் கண்ணீரை காண்கிறவர்கள் யாரும் இல்லை, என் துக்கங்களை காண்கிறவர்கள் யாரும் இல்லை, என் தலையணையை நான் கண்ணீரால் நனைக்கிறேன் என்று சொல்கிறீர்களா? உங்களை காணும் தேவன் உண்டு. உங்கள் கண்ணீரை கண்டு உங்களுக்கு விடுதலை அளிக்கும் தேவன் உண்டு. உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும், அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனை கேட்டருளினார் என்று சங்கீதம் 22:24-ல் வாசிக்கிறோமே! நம்முடைய உபத்திரவத்தைப் பார்த்து அதை அற்பமாய் எண்ணாமல், தம்மை நோக்கிக் கூப்பிடும்போது, கேட்டு பதில்கொடுக்கும் உன்னத தேவன் நம் தேவனல்லவோ!

நம் கண்ணீர் ஒரு நாளும் வீணாய்போவதில்லை. அது அவருடைய துருத்தியில் வைக்கப்பட்டிருக்கிறது. அன்று ஆகாரின் கண்ணீரைக் கண்ட தேவன், அவளுக்கு பதிலைக் கொடுத்ததினால் அல்லவா அவள் அவருக்கு எல்ரோயி என்று பேரிட்டாள். எல்ரோயி என்பதற்கு, என்னைக் காண்கிறவர், என் கண்ணீரை காண்கிறவர் என பொருள்படுகிறது.


ஒருவேளை நீங்களும் பெலனில்லாமல் போகுமட்டும் அழுகிறீர்களோ? உங்கள் வாழ்க்கையில் காணப்படும் பாடுகள் நிமித்தம் யார் என்னை விடுவிப்பார் என்று கதறுகிறீர்களோ? தாவீதின் தேவன் இன்றும் மாறாதவராய் இருக்கிறார். அவர் நம் கண்ணீரைத் துடைக்கிற தேவன். அவரை உறுதியாய் பற்றிக்கொண்டு என்னை விடுவியும் என்று அவர் பாதத்தை பிடித்துக்கொண்டு விடாதிருங்கள். உங்கள் கண்ணீர் அவர் பாதத்தில் சிந்தப்படட்டும். அப்பொழுது இயேசு கிறிஸ்து உங்கள் துக்கங்களை சந்தோஷமாய் மாற்றுவார். அல்லேலூயா!

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**

**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

# திடமனதே திரவியம்



**மண்ணில்** : 293
**விண்ணில்** : 02-05-373
**ஊர்** : அலெக்சாண்டிரியா
**நாடு** : எகிப்து
**தரிசன பூமி** : அலெக்சாண்டிரியா

கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்திற்காக நீங்கள் எப்பொழுதாவது நாடு கடத்தப் பட்டிருக்கிறீர்களா? தன் வாழ்நாளில் 5 முறை நாடு கடத்தப்பட்டார் அதநேஷியஸ்.

கிரேக்க சபையில் சிறந்த வேத அறிஞர்களில் ஒருவர் அதநேஷியஸ். வேதப்புரட்சியும், சபைப் பிரிவினைகளும் கடவுளின் பெயரால் கொடுமைகளும் நடைபெற்று வந்த காலத்தில் அனைத்து துன்பங்களின் மத்தியிலும் கிறிஸ்தவ விசுவாசங்களைத் தொகுத்து விசுவாசிகளை பலப்படுத்தி கிறிஸ்தவ சபைக்குச் சிறந்த தொண்டாற்றியவரே இம்மாமனிதர்.

பலமுறைகள் இவர் பெயரில் அவதூறான குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டன. ஆரியஸ் என்பவரின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்கள் இவருக்கு எதிரியானார்கள்.

சக்கரவர்த்திகளுக்குச் சரியான வேத அறிவு இல்லாததால் இவர் அடிக்கடி நாடு கடத்தப்பட்டார். சபைகள் விசுவாசத்தில் தழைத்தோங்க வேண்டும் என்ற காரணத்தால் சகலவித துன்பங்களையும் அவர் மனநிறைவோடு ஏற்றுக்கொண்டார்.

அலெக்சாண்டிரியா நாடு பலமுறை அவரை இழந்து தவித்தது. ஐந்தாவது முறை நாடு கடத்தப்பட்டபோது அலெக்சாண்டிரியாவில் பெரும் குழப்பம் ஏற்படவே அவர் மீண்டும் தன் நாடு திரும்பினார்.

90 அத்தியட்சர்களை ஒன்றாக கூட்டி விசுவாச சத்தியங்களைத் தொகுத்து எழுதி அவைகளை சபைகளுக்கு அனுப்பி மக்களை விசுவாசத்தில் திடப்படுத்தினார்.

அவரின் வேத அறிவும், சுயநலமின்மையும், ஜெப ஜீவியமும், தூய வாழ்க்கையும் மக்கள் மனதைக் கவர்ந்தன. அதன் பலனால் திருச்சபைகள் வளர்ந்து பெருகின.

அன்பரே! அசைக்க முடியாத விசுவாசம் உங்களிடையே உள்ளதா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : மற்றவர்களுக்காக உன்னை நீ மறந்துவிடு, மற்றவர்கள் ஒருக்காலும் உன்னை மறவார்கள்.

**குயவனின் கரங்களில்** : ஆண்டவரே! திடமனதோடு, உந்தன் பணிசெய்ய என்னை வழிநடத்தும்.

**தியானத்திற்கு : உபா. 19, பிரசங்கி 11, அப். 10**

## தகவல்கள்



போலியோ சொட்டு மருந்தைக் கண்டுபிடித்த வைத்தியர் ஜோனாஸ் சால்க் குழந்தைகளுக்கு இந்த தடுப்புமருந்து இலவசமாக கிடைக்க வேண்டும் என்பதற்காக அதற்குரிய பேட்டன்ட் எனக்கு வேண்டாம் என்று சொல்லி அவர் இழந்த தொகை 700 கோடி அமெரிக்கன் டாலர். அதாவது இந்திய ரூபாய் மதிப்பில் 45,000 கோடி ரூபாய். மனிதகுல நன்மைக்காக பெரும் கொடையளித்த கொடையாளி.

## *New Arrivals*

**“பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்”**



**Miss. Jolene Arianna**

**D/o Mr. Joel Gnanasekaran & Mrs. Ashika Sharon**

**17-04-2019**

## நன்றி கூறுகிறோம்




**கடந்த மாதம் நமது திருச்சபையின் பல அங்கத்தினர்களுக்கு உணவிற்க்கான பொருள் உதவியை நிறைவாய் வழங்கிய P.C.O-விற்கு நன்றி கூறுகிறோம்.**

## மே 2020 மாத கேள்விகள்
## (சங்கீதம் 114 - 123 வரை)

1. மகா விஸ்தாரமானது எது?
2. எதை மரணத்துக்கு தப்புவித்தீர்?
3. யாருக்கு மிகுந்த சமாதானமுண்டு?
4. பரிசுத்த ஸ்தானம் எது?
5. யாருடைய நிந்தனையினால் ஆத்துமா மிகவும் நிறைந்திருக்கிறது?
6. நிணந்துன்னிக் கொழுத்திருக்கிறது எது?
7. என் சிறுமையில் எனக்கு ஆறுதல் எது?
8. இசைவிணைப்பான நகரமாய்க் கட்டப்பட்டிருக்கிறது எது?
9. கர்த்தர் எதை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார்?
10. சஞ்சலத்தால் கரைந்துபோகிறது எது?
11. மனுஷனுடைய கைவேலையுமாயிருக்கிறது எது?
12. எங்கு போவோம் வாருங்கள் என்று சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்?
13. இரட்சிப்பின் கெம்பீரசத்தம் எங்கு உண்டு?
14. இன்பமும், ஆலோசனைக்காரருமாயிருக்கிறது எது?
15. வலது பக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறவர் யார்?
16. யாருடைய மரணம் கர்த்தரின் பார்வைக்கு அருமையானது?
17. வீண்சிந்தனைகளை வெறுத்து எதில் பிரியப்படுகிறேன்?
18. பலிபீடத்தின் கொம்புகளில் கயிறுகளால் கட்டப்பட்டது எது?
19. வானங்கள் யாருடையவைகள்?
20. கர்த்தரின் வாக்கின்மேல் நோக்கமாய் எது பூத்துப்போகிறது?

## ஏப்ரல் 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. நிர்மூடர் - சங். 107:17
2. நீதிமான் - சங். 112:6
3. தேவதாரு விருட்சங்கள் - சங். 104:17
4. முழங்கால்கள் - சங். 109:24

5. கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் - சங். 105:3
6. சிறியவனை – சங். 113:7
7. நியாயக்கேடெல்லாம் - சங். 107:42
8. கர்த்தருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் - சங். 111:10
9. எப்பிராயீம் - சங். 108:8
10. மகிமையை – சங். 106:20
11. சாபம் - சங். 109:18
12. தம்முடைய ஊழியக்காரரை – சங். 104:4
13. செம்மையானவர்களின் - சங். 112:2
14. யோசேப்பு – சங். 105:17
15. ஆத்துமா – சங். 107:26
16. வல்லமையின் செங்கோலை – சங். 110:2
17. தமக்கு பயந்தவர்களுக்கு – சங். 111:5
18. யாக்கோபு – சங். 105:23
19. வெண்கல கதவுகளை – சங். 107:15
20. தேசம் - சங். 106:38

## ஏப்ரல் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Josephin Anto Kingston | Mrs. Sapthekha Jerry Sathya |
| Mrs. Ancy Daniel | Mrs. Juslin Jaslin | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Aspin Bejo | Mrs. Leela Gladson | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Boopathi Baskar | Mrs. Manju Martin | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Mary Praveena Gobinath | Mrs. Shiney Johan |
| Mrs. Felsi Rani John | Mrs. Nisha Rajan | Mrs. Sujatha Shalini Jino |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Percy Jean | Mrs. Thamari Johnson |
| Mrs. Gracilin Melba Sujin | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Pushpa Rani Moorthy | Mrs. Vency Deepa Kannan |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Regin Justa Vinolin | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Jeya Rani Victor | | |

# ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 70

## மே 2020 மாத கேள்விகள்
## (யோபு 1-10)

1. யாருடைய நம்பிக்கை சிலந்திப்பூச்சி வீடு போலிருக்கும்?
2. தன் உதடுகளால் பாவஞ்செய்யாதவன் யார்?
3. காட்டுக் கழுதை கத்தாத இடம் எது?
4. யாருடைய ஆலோசனை கவிழ்க்கப்படும்?
5. ஒட்டகங்கள் மேல் விழுந்து, ஓட்டிக்கொண்டு போனவர்கள் யார்?
6. புத்தியில்லாதவனை அதம்பண்ணுவது எது?
7. மனிதன் உண்ணும் உணவில் சுவையற்ற பொருள் எது?
8. பூமியின்மேல் நிழலைப்போலிருக்கிறது எது?
9. சமுத்திரத்திலுள்ள எந்த மீனை தேவன் காவல் வைக்கிறார்?
10. இருவர்மேலும் தன் கையை வைக்கத்தக்கவன் யார்?
11. யோபுவின் சிநேகிதர்கள் ஒரு வார்த்தையும் பேசாமல் எத்தனை நாட்கள் தரையிலே உட்கார்ந்திருந்தார்கள்?
12. அயர்ந்த நித்தரை இறங்குகையில் இராத்தரிசனங்களில் என்ன உண்டாகும்?
13. வெளிச்சத்தை காணாதது எது?
14. வனாந்தர வழியாய்ப் பெருங்காற்று வந்து, வீட்டின் எங்கு அடித்தது?
15. சிநேகிதனால் யாருக்கு தயை கிடைக்கவேண்டும்?
16. தேவன் யாரை வெறுக்கிறதுமில்லை?
17. யோபின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் சாத்தான் அவனை எதால் வாதித்தான்?
18. யோபுவுக்கு முன்பாக அணியணியாய் நிற்கிறது எது?
19. ஒரு புருஷனுடைய ஜீவக்காலத்தைப் போலவும் இருக்கிறதோ? என யோபு எதைக் குறிப்பிடுகிறார்?
20. வெள்ளம்போல் புரண்டுபோகிறது எது?

## ஏப்ரல் 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. ஸ்திரீகளை காவல்பண்ணுகிற யேகாயினிடம் - எஸ்தர் 2:8
2. ஆமான் - எஸ்தர் 6:4
3. மொர்தெகாயின் கீர்த்தி – எஸ்தர் 9:4
4. ராஜ அரமனையை சேர்ந்த சிங்காரத்தோட்டத்திலுள்ள மண்டபத்தில் - எஸ்தர் 1:5
5. ஆத்தாக் - எஸ்தர் 4:5
6. எஸ்தருக்கு – எஸ்தர் 8:1
7. மொர்தெகாய் - எஸ்தர் 10:3
8. அபியாயேலின் குமாரத்தி – எஸ்தர் 2:15, 9:29
9. தேபேத் மாதமாகிய பத்தாம் மாதம் - எஸ்தர் 2:16
10. ராஜாத்தியாகிய எஸ்தரிடத்தில் - எஸ்தர் 7:7
11. ராஜஸ்திரீயாகிய வஸ்தி – எஸ்தர் 1:9
12. சூசான் நகரம் - எஸ்தர் 3:15
13. ஆமானின் வீட்டண்டையில் - எஸ்தர் 7:9
14. மொர்தெகாய் - எஸ்தர் 2:19,21, 5:13, 6:10
15. அஞ்சற்காரர் - எஸ்தர் 3:15
16. யூதர்கள் - எஸ்தர் 9:19
17. ராஜாவும், ஆமானும் - எஸ்தர் 5:5
18. ஆமான் - எஸ்தர் 6:12
19. மொர்தெகாயை – எஸ்தர் 8:2
20. 10 – எஸ்தர் 9:12-14

## ஏப்ரல் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mr. Alex Baskar | Mr. Jaslin Sundara Kumar | Mr. Lenin Raj |
| Mr. Anand | Mr. Jean C. R. Shibin | Mr. Prince J. P. |
| Mr. Anshio Shajin | Mr. Jino John | Mr. Rajan V. N. |
| Mr. Austin Daniel Raj | Mr. Johan Pratheep | Mr. Ramesh R. |
| Mr. Bejo Nelson | Mr. Justus Martin | Mr. Robin Devadhas |
| Mr. Daniel Raj P. | Mr. Kanagavel | Mr. Sujith Gladson |

# May God Bless All

## Birthday Celebrants – May 2020

| | |
|---|---|
| 02nd May | Mr. Atheesh |
| 03rd May | Master. Jaydon Immanuel, S/o Mr. Ramesh |
| 03rd May | Master. Rishan Robin Garwin, S/o Mr. C.D. Robin Raj |
| 03rd May | Mr. C. J. Bravin |
| 05th May | Mr. Jegan Broose |
| 05th May | Mr. H. Jayaraj |
| 07th May | Miss. Eunice Drusilla, D/o Mr. Robin Devadhas |
| 08th May | Mr. Arun Nickson, S/o Mr. Nelson |
| 09th May | Mr. Bejo Nelson |
| 09th May | Master. Jesien Manoj, S/o Mr. Justus Martin |
| 09th May | Miss. G.M. Johnsey Gobisha, D/o Mr. Gobinath |
| 10th May | Mr. Rabi |
| 10th May | Mrs. Gracelin Melba, W/o Mr. Sujin |
| 10th May | Mrs. Rabboni Robin, W/o Mr. C.D. Robinraj |
| 11th May | Mrs. Menaga, W/o Mr. David Prabhakaran |
| 11th May | Mrs. Sumathi, W/o Mr. Jones |
| 11th May | Miss. D. Joyce Davina, D/o Mr. Dhinakaran |
| 11th May | Mr. N. Selvakumar |
| 12th May | Mr. Moorthy |
| 12th May | Mrs. Virgin Jegatha, W/o Mr. Jino John |
| 13th May | Mr. Gnanadhas |
| 17th May | Mr. David Sunder Singh |
| 17th May | Mr. C. Stalin |
| 18th May | Master. Dani J. Bose, S/o Mr. Jose Chandra Bose |
| 18th May | Mr. Johnson Raj |
| 18th May | Mrs. Susamma |
| 20th May | Mrs. Kala, W/o Mr. Jegan Broose |

| | |
|---|---|
| 20th May | Mrs. Synthia, W/o Mr. Srinivas |
| 20th May | Mr. Jaslin Sundarakumar |
| 21st May | Mr. C. Immanuel Prince |
| 21st May | Master. S. Dino, S/o Mr.C. Sujin |
| 22nd May | Mrs. Sangeeth Johns, W/o Mr. Augustin |
| 25th May | Mrs. Jeya Rani, W/o Mr. Victor |
| 27th May | Mr. G. Jabastin |
| 29th May | Mr. Sujith Gladson |
| 31st May | Mr. I. Simson |
| 31st May | Master. D. Janith Charan, S/o Mr. David Prabhakaran |

## Wedding day Anniversaries – May 2020

| | |
|---|---|
| 01st May | Mr. Ramji & Mrs. Sterbie |
| 01st May | Mr. Victor Johnslin & Mrs. Jancy Deepa |
| 04th May | Mr. Ashok & Mrs. Angel |
| 05th May | Mr. Selvakumar & Mrs. Wiselin Shalisa |
| 05th May | Mr. S. Kannan & Mrs. Vency Deepa |
| 05th May | Mr. T.N. Brejin & Mrs. Rupa |
| 06th May | Mr. Jean C.R. Shibin & Mrs. Percy |
| 07th May | Mr. Alex Baskar & Mrs. Boopathi |
| 07th May | Mr. Winson & Mrs. Hema |
| 10th May | Mr. Kanagavel & Mrs. Priyadarsini |
| 10th May | Mr. Bensam & Mrs. Gracelin Rani |
| 10th May | Mr. S. Sujin Issac Samuel & Mrs. Deena |
| 12th May | Mr. Victor Thaya Singh & Mrs. Jeya Rani |
| 16th May | Mr. Selvamani & Mrs. Vimala |
| 16th May | Mr. Vinolin Vetha Kumar & Mrs. Regin Jesta |
| 25th May | Mr. Kingsly & Mrs. Mary Suja |
| 25th May | Mr. Jegan Broose & Mrs. Kala |
| 25th May | Mr. Rex Macedo & Mrs. Geetha |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நமது திருச்சபை போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழுவுக்காகவும், அவர்கள் தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிடவும் ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர்கள் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.

### மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- தேசத்தலைவர்களுக்காகவும், அரசு அதிகாரிகளுக்காகவும், அதிகாரத்திலுள்ள அனைவரும் நேர்மையும் பயனுள்ள வகையிலும் ஆளுகைசெய்ய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.
- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இந்திய தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி நிலைமாற மன்றாடுவோம்.

**குடும்பங்களுக்காக ஜெபிக்க:-**

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.

- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.
- கருவுற்றிருக்கிற சகோதரிகளின் உடல்நலத்திற்காகவும், சுகமான விடுதலைக்காகவும், தாய் சேய் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

## சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவேண்டல் குறிப்புகள்:-**

1. கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......
4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வுகள், முயற்சிகள் முழுமையான பலனைத் தரவும்......
6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
7. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்க்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......

8. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...
9. 210-க்கும் அதிகமான நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. எல்லா நாடுகளும் பாதுகாக்கப்படவும்.....
10. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....
11. குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

## அனுதின மன்னா – மே 2020

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| **மே 1** | **வெள்ளி** | **லூக்கா 15:11-32** | **லூக். 15:23** | **1நாளா. 21-23** |
| மே 2 | சனி | லூக்கா 14:13-15 | லூக். 14:14 | 1நாளா. 24-26 |
| மே 3 | ஞாயிறு | யாத். 40:34-38 | யாத். 40:38 | 1நாளா. 27-29 |
| மே 4 | திங்கள் | லூக்கா 24:13-35 | லூக். 24:35 | 2நாளா. 1-4 |
| மே 5 | செவ்வாய் | லூக்கா 24:36-49 | லூக். 24:43 | 2நாளா. 5-7 |
| மே 6 | புதன் | மாற்கு 16:12-18 | மாற்கு 16:14 | 2நாளா. 8-11 |
| மே 7 | வியாழன் | மத்தேயு 28:14-20 | மத். 28:19-20 | 2நாளா. 12-16 |
| **மே 8** | **வெள்ளி** | **யோவா. 20:24-29** | **யோவா. 20:29** | **2நாளா. 17-19** |
| மே 9 | சனி | அப். 1:3-11 | அப். 1:8 | 2நாளா. 20-22 |
| மே 10 | ஞாயிறு | ஏசாயா 40:1-11 | ஏசாயா 40:11 | 2நாளா. 23-25 |
| மே 11 | திங்கள் | ரோமர் 12:14-21 | ரோமர் 12:21 | 2நாளா. 26-29 |
| மே 12 | செவ்வாய் | ரோமர் 10:5-11 | ரோமர் 10:9 | 2நாளா. 30-32 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| மே 13 | புதன் | 1தெச. 5:14-20 | 1தெச. 5:17 | 2நாளா. 33-34 |
| மே 14 | வியாழன் | கொலோ. 3:8-14 | கொலோ. 3:8 | 2நாளா. 35-36 |
| **மே 15** | **வெள்ளி** | **2தெச. 3:6-18** | **2தெச. 3:10** | **எஸ்றா 1-4** |
| மே 16 | சனி | 1பேதுரு 3:8-18 | 1பேதுரு 3:11 | எஸ்றா 5-7 |
| மே 17 | ஞாயிறு | யோவா. 14:26-31 | யோவா. 14:27 | எஸ்றா 8-10 |
| மே 18 | திங்கள் | அப். 17:22-31 | அப். 17:30 | நெகே. 1-4 |
| மே 19 | செவ்வாய் | யோவா. 20:11-23 | யோவா. 20:18 | நெகே. 5-7 |
| மே 20 | புதன் | அப். 3:17-26 | அப். 3:20 | நெகே. 8-10 |
| மே 21 | வியாழன் | லூக்கா 4:16-22 | லூக்கா 4:18b | நெகே. 11-13 |
| **மே 22** | **வெள்ளி** | **கலா. 3:26-29** | **கலா. 3:26** | **எஸ்தர் 1-4** |
| மே 23 | சனி | யோவா. 15:12-13 | யோவா. 15:13 | எஸ்தர் 5-10 |
| மே 24 | ஞாயிறு | யோவா. 3:12-16 | யோவா. 3:16 | யோபு 1-4 |
| மே 25 | திங்கள் | ரோமர் 8:31-39 | ரோமர் 8:33 | யோபு 5-8 |
| மே 26 | செவ்வாய் | அப். 5:26-33 | அப். 5:29 | யோபு 9-12 |
| மே 27 | புதன் | ஏசாயா 52:1-15 | ஏசா. 52:12b | யோபு 13-17 |
| மே 28 | வியாழன் | யாத். 17:8-16 | யாத். 17:9 | யோபு 18-21 |
| **மே 29** | **வெள்ளி** | **லூக்கா 24:44-53** | **லூக். 24:50** | **யோபு 22-26** |
| மே 30 | சனி | யோவான் 3:9-16 | யோவா. 3:16 | யோபு 27-30 |
| மே 31 | ஞாயிறு | ரோமர் 8:12-23 | ரோமர் 8:16 | யோபு 31-34 |
| ஜுன் 1 | திங்கள் | ரோமர் 8:5-11 | ரோமர் 8:9 | யோபு 35-38 |
| ஜுன் 2 | செவ்வாய் | 1கொரி. 12:1-11 | 1கொரி. 12:7 | யோபு 39-42 |
| ஜுன் 3 | புதன் | 1கொரி. 2:6-12 | 1கொரி. 2:7 | சங்கீதம் 1-7 |
| ஜுன் 4 | வியாழன் | ரோமர் 8:12-17 | ரோமர் 8:15b | சங்கீதம் 8-14 |
| **ஜுன் 5** | **வெள்ளி** | **யோவா. 14:14-21** | **யோவா. 14:14** | **சங்கீதம் 15-18** |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்

**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**

**(For Private Circulation Only)**